உ

திருச்சிற்றம்பலம்.

திருவிற்கோலமென்னும்

கூவத்துப்புராணமூலம்

காப்பு.

ஞாலவார்ந்தங் குளிர்விண்வளத்துறக்
கவளத்தந்தக் கரணமிருத்திய
பவளத்தந்தப் படிவநிகர்த்தொளிர்
தவளக்கோட்டுத் தலைவனை வாழ்த்துவாம்.

பத.	பொருள்.
ஞா	மண்ணுலகம்
வார்த்து	தாமறுகரும நுகர்வை
ஆர்த்த	ஆர்ந்த
குளிர்விண்	குளிர்ந்த விண்ணுலகம்
வளத்து	தாமறுகரும் நுகர்வையும்
உற	அனுபவிக்க
கவளத்து	கவளத்தில்
அந்தக்கரணம்	தமது அந்தக்கரணத்தை
இருத்திய	வைத்த
பவளத்து	பவளத்தினது
அந்தம்படிவம்	அழகிய வடிவை
நிகர்த்து ஒளிர்	ஒத்து விளங்காநின்ற
தவளம்	வெள்ளிய
கோட்டுத்தலைவனை	கொம்பினையுடைய யானைமுகக்கடவுளை
வாழ்த்துவாம	துதிப்பாம

(பவளத்தந்தப் படிவநிகர்த்தொளிர்) என்பதற்கு அழகிய தமது திருவுருவும் பவளத்தை ஒத்து விளங்கும் எனப்பொருள் கொள்ளினும் அமையும் ஆனமாக்கள நுகர்ச்சிப்பொருட்டு

தாம் போகியாயிருப்பது முதற்கடவுள இயல்பாதலால் (குவளைத்தந்தக் குளிர்விண்வளத்துறக் - கவளத்தந்தக் கர[illegible]திய) எனவும் அந்தக்கரணத்தில் மனம் முதற்பொருளாதலின் அதனை அந்தக்கரணமெனவும் கூறினார்.

இச்செய்யுட்கு மண்ணுலக இன்பத்திலும், விண்ணுலக இன்பத்திலும், அன்பர் நிலைபெறுமாறு அவரால் நிவேதிக்கப்படுங் கவளத்தில் திருவுளம்வைத்தருளும் எனவுரைப்பதும் ஒன்று. பிள்ளையாரது திருவுளப்பாங்கே, சத்தியாதலால், அந்தக்கரண மிருத்திய வென்றார். மண்-விண்-இரண்டும் உயிர்கள் மேல் நிற்றலில் இடவாகுபெயர்கள்.

நச்சிறுத்தநயனக் குவிமுலைப்
பொச்சிறுத்த நுசுப்பினர்ப்போற்றிவாய்
மிச்சிறுத்த விரகிலிக்காங்கொலோ
வச்சிறுத்த வடிகளடிகளே.

நச்சு	நஞ்சு
இறுத்த	தங்கிய
நயனம்	கண்களையும்
குவிமுலை	குவிந்த முலைகளையும்
பொச்சு	கரிண்போர்க்கின்மையாய்
இறுத்த	[illegible]டிந்த
நுசுப்பினர்	[illegible]டையையுமுடையபெண்களை
போற்றி	[illegible]தித்து
வாய்மிச்சில்	அவர்கள்வாயெச்சிலை
நுத்த	அனுபவிக்கும்
விரகுஇலிக்கு	பேரறிவுஇல்லாதவனுக்கு
அச்சுஇறுத்தஅடிகள்	அச்சிறுத்தவிநாயகக்கடவுளது
அடிகள்	திருவடிகள் [படி
ஆம்-ஓ	பயன்படுமோ (பயன்படாவென்ற

சிவபெருமான் திரிபுரதகனஞ் செய்ய விநாயகக்கடவுளைப் [illegible]சியாது எழுந்தருளியபோது தேரின் அச்சுமுறி[illegible]ப்பின்

னர் விநாயகக்கடவுளைப்பூசித்துச் சென்றுரொன்பது புராண வரலாறு ஆதலின் அச்சிறுத்த அடிகளென்றார். "திங்களணி சடைப்பெருமான் பூசையாற்றித் திரிமதிலும் கடந்திடமுன் னின்றுன்யாவன்," எனப்பிள்ளையார் புராணத்திற் காண்க. கொல-அசைநிலை.

இறுத்த என்னும் பிறவினைப் பெயரெச்சம் இற்ற என தநன் வினைப்பொருளில் வந்தது-துத்த இறந்தகாலப் பெயரெச்சம்-து-பகுதி-த்- சந்தி-த்- இடைநிலை-அ-விகுதி.

புராந்தகேஸ்வரர்துதி.

நீர்கொண்ட சடையெரிநெய பெருங்காமத் தழலவிப்ப திற் கினையுனைக், கூர்கொண்ட கனன்மழுமா னுண்மையும் பெ ணுண்மையுமாய கூற்றிற்கேற்ப, சீர்கொண்ட வலனிடநகொ ளுயகனைப் புகலியர்றை செந்தமிழ்ப்பூர, தார்கொண்ட திரு விற்கோலப்பெருமான் றனையிதயத் தவிசின்வைப்பாம்.

புராந்தகியம்மைதுதி.

பைத்தசிறுமணி பாவந்த ழ்ந்துமதிகவர்கின்றபரிசதென்ன, மெய்த்தவிரும் புசழுத்திருவிற் கோலநாயகன்மகிழ விற்கோ லத்தை, யொத்தநுதலிடைப்பொற் சுட்டியின் கீழ்வெ ண்டிலத வொளிரத்தீட்டி, வைத்தருளு மெழிலுடைப்பை பரவல்குலம்மைபதம் வணக்கஞ்செய்வாம்.

நடேசர்துதி.

சீர்கொண்டமலைமாதின் றிருநுதல்கண்டராப்பகைவெண் டங்கனீங்கி, யார்கொண்டசடையரவ மல்குலைக்கண்டட னகையுழைப் பகைமையயார்த்து, நேர்கொண்ட வுழைவிழி ண்டருகுறவெய்ப் புலிப்பகைநீத் திருப்பநின்றே, யேர் கொண்ட தனித்தில்லை நடம்புரியெம் பெருமானையிறைஞ்ச செய்வா

பாயிரம்.

சிவகாமியார் துதி.

வன்னிகரம் வளர்வுறநற் பணிபயில வருவார்க்குச்செகசால கமீந்து, பன்னுநுதன் மதியடியார் பரிபுரங்கண் டெழிற்கனிமெல் விதழியார்ப்பப், பொன்னனுகு மலநகைசேர்ந் திகைகெளரி மறையோதிப் புரிந்துதாழத், தன்னையிடத் திருத்துபரம் பொருளைநிக ருமையம்மை சரணிற்றாழ்வாம்.

கணபதிதுதி.

கற்றைநெடுஞ் சடாமவுலிப் பிறையுமொரு தன்கோடுங ரத்திற்சேர்த்து, மற்றைநிறைமதியாக்கி மறுவிகந்தவல்லடை தன் வடிவுபூத்த, நெற்றிநிகர்த் தலையன்றி யழகொழுகு திருமுகத்துக்கு நிகர்ப்பநேயம், பெற்றமழ களிற்றைமணச் சேவகத்தி னிறுவியிடர்ப் பிறவிதீர்ப்பாம்.

சுப்பிரமணியர் துதி.

நான்குமுகன் றெருழுமைந்து முகனீன்ற வாறுமுக நாதன் றன்னை, வான்குலவு மொருகடவுள் யானையின்பாகனைப்பு ணத்து வடிவுகூர்ந்த, மான்குறுகலெங்கையுரு வெடுத்தானை யசுரர்குல மாய்த்துப்பேய்கட், கூன்குருதி யொடுமேளவிப் புதுவிருந்திட் டானைநம துளத்துள்வைப்பாம்.

திருநந்திதேவர் துதி.

பாக்குலங்கள் பழிச்சுனர் நெஞ்சமும்
வாக்குமங்கை வடிவு நிகர்த்தொளி
தேக்கும்வெள்ளிச் சிலம்புட னெம்மையும்
காக்குநந்தி கழறொழு தேத்துவாம்.

காரைக்காலம்மையார் துதி.

இட்டந்துகண்களிற் கேட்கு மவன்பு
ழன்டந்தகைகொ ளுயிர்ப்பவ னத்தன்வாழ்
வட்டந்தயங்கு வனத்திற் றலைபிறை
ஞட்டந்தவம்மை பதமலர் நண்ணுவாம்.

திருஞானசம்பந்தர் துதி.

அங்கமான தனங்கினு மேம்படு
மங்கையாகப் படைத்து மகளெனப்
பங்கையாதனன் வெள்குறப் பார்த்தருள்
பொங்குஞான சம்பந்தனைப் போற்றுவாம்!

திருநாவுக்கரையர் துதி

மருக்குலாவு மறைவனத் தோன்றிய
திருக்கபாடந் திறந்தசொல் வேந்தனை
யருட்குலாவு மறிவினை மூடிய
விருட்கபாடந் திறக்கவு மேத்துவாம்.

திருநாவலூரர் துதி.

கன்றுகாமங் கழன்ற[illegible]ர் தன்னுரு
வென்றுமோர்கரி தென்றிருப் போன்றனை
யன்றுதூது வநுகியரிவைபாற்
சென்றுவாவென்ற தீரனை வாழ்த்துவாம்.

திருவாதவூரர் துதி.

இன்பமாணிக்க வாசக னென்றுமோர்
மன்பெரும்பெயர் யாரும் வழங்குறத்
தன்பெயர்க்கொடை யோடு தரித்தபே
ரன்புதன்னை யகத்து ளிருத்துவாம்.

அவையடக்கம்.

மூதறி வாளரு மறிவின் மூகரு
மோதுறு நடுநிலை யோருஞ் சொற்பொருட்
டீதுறாப் பதற்கொரு செய்கை கண்டிலே
னாதலி [illegible]னன்கவிச் சிறிவின் றுகுமால்.

நூல்வரலாறு.

காவிநேர்விழி மங்கைபங்கின னிசைக்கசாந்த
மோ[illegible]மா சனற்குமாரசங்கிதையின் விரித்த

பாயிரம்.

தாவில்காளிகா காண்டமென கடற்புகழ்தனிற்
கூவரீர்மையுட் கொண்டியான் கூறுவன்றமிழால்

தனியன்.

பொருந்தாரரணம் பொடிபடுத்த பொன்னஞ்சிலையான் கூவத்தி, லிருஞ்சீர்தமிழாற் புலவதல்செய்தா னிசைழ்கூப்பா தவத்தாதி, யருந்தாமதத்தான் புனைந்துசெந்தி லமர்ந்தகுமரா முதறடிந்த, பெருந்தோண்மலைகட் கணேந்தசிவப் பிரகாசூப் பேர்ப் பெருந்தகையே. கஎ

பாயிரம் முற்றுப்பெற்றது. ஆகதிருவிருத்தம்-கஎ.

க-வது. நைமிசாரணியச்சருக்கம்.

சேவம்புலா மலர்க்கொடி நானிலத்திகழும்
பாதவம்புக லாதியவளமெலாம் பின்ற
நாதவம்பனி மழைபொலிக் குன்றிடாதமர்
மாதவம்புரி வோர்க்கிட நைமிசவனமே.

பொன்னுலாமலர்க் கற்பகாடவி நிழற்போக
மின்னலாவென வெறுத்திந்த வனைதிடையின்ப
மனையான்புக வருளென வீசனைமகவா
னுன்னிவேண்டிவ னெனிலதன் சிறப்பெவருரைப்போ

வந்ததேயுணவாகி மற்றாறுறு மறத்துச்
சிந்தயோகிகள் போன்றுபோகிக ளுறைததமது
புந்திபோம்விரி வொடுக்கியே பொறிப்பணமடக்கு
முந்துபோகிகள் போன்றியோ கிசருறுமுதிர்சா

எலியும்பாம்புமங் கதமுமஞ்ஞையு மிளமையிலு
கலியுமோம்பியு மொருத்தலு டங்கலுநவ்யும்
புலியுந்தாம்பெறு பகைபொரீஇப் புன்றுமயினத்தின்
மெலியும்பாவமு மீறமுமே பகையின்றிவிழும்.

ஆதிமாலயன் மனத்தெழு மகந்தையையடக்க
மீசூலாமழன் மயனெந்தம்ப மிக்குயர்ந்த

கூவத்துப்புராணமங்கலம்.

சோதிமா மரமுகிலதிற் சூழ்தருதாமந்
தீதிலாவகி மணிசிதறிய பொறிச்சிவணும்.
[illegible]ன்நான்கையுங் [illegible]டந்தமுக்கட் பெருங்கடவுள்
சரணவாரிசம் பற்றெனவடைந்ததாபதர்க்குத்
தருணவேள்வியிற் பகைஞர்சாதித்திடப்படாத
வரணமாயது நலந்தரு நைமிசாரணியம்.

பேர்சோகமே யெனக்கொடு பிண்டிவின்மதவேள்
வீரவாளியா மலர்ந்துதன்பங்களே விளைத்த
கோரபாவ மற்றப்பெயர் மெய்பெறக்குளிர்ந்து
வாரமாதவர் சோகநீத்திட மலர்வழங்கும்

அருந்தவம்பயின் றைம்புலக் குறும்பினையடர்த்து
திருந்துநன்முனி வராவனத் தொருதனித்திகிரி
மரந்தயங்குவெண் குடைநிகர் மதிதனுதும்பர்ப்
பொருந்துகின்றுழிக் காம்பெனும் பெயரினைப் புதுக்கு

வேறு.

நெட்டிலைகொண்டு நிமிர்ந்தெழுதாழை
கட்டியணைந்துறு கனறனைப்பூகைப
புட்டிலையொக்கு மிசைக்கதிர்ப்போது
நட்டிவர்செவ்வயி னம்பியையொக்கும்.

எரிபுரைகின்ற விளந்தளிர்மாவி
னருகுறநீனிற மார்தருபுன்னை
மருவுதல்செஞ்சடை வள்ளன்மருங்கு
தருமமிவளர்ப்பவ டங்குதலொக்கும்.

ஒன்றியொடொன்றிழை யொண்கழைதன்னில்
வன்றழல்வந்து வளர்ந்தெழமீது
சென்றமர்ந்தி திடுக்கிடு விண்ணின்
மன்றனெடுந்தரு வின்மிசைவாவும்
பாசிலைகொண்டுயர் பாதவமென்பூ
[illegible]யர் மருங்கினுகுத்தல்

... வனன்பு கிடைத்தவர்மீது
வீசுறுமொய்ம்மலர் மாரியின்மேவும்.

வேறு. இத்தகைநலம்பெற்றுள்ள வெஃகிறருவனத்தின்மேய
மெய்த்தவர்புலன்களைந்தும் விரவுறுமனமுமீட்டு
முத்தலையயங்கமேந்து முதற்பெருங்கடவுடன்பா
றுய்த்தவருலகவாழ்வை யொருபொருளாகக்கொள்ளார் கங

உலகினர்செல்வந்த லுமைபொருளிருண்டுங்கோட
லிலகுவிண்மதியங்காட்ட வென்றுமோர்சிசைத்தாய்ச்சேறல்
கிலகுதஞ்செல்வமெங்கள் விழுப்பொருளாயவண்ணை
லலகில்செஞ்சோதிப்பின்ன லணிமதியுணர்த்தவாழ்வார் கச

அன்புகொண்டருஞ்சிவத் தோடயர்ந்தறுபவிர்திருக்கு
மின்பமுமுத்தியென்றே யிகந்துறந்துடையமேலோர்
துன்புமிக்கெய்திமின்னிற் றுலைந்துபோஞ்சிற்றின்பத்தின்
றன்பரிவறத்துறத்தல் சாற்றவேண்டுவதுமுண்டோ. கரு

சேயரிநெடுங்கட்செவ்வாய்ச் சிறுநுதற்கரியகூந்தல்
வேயமர்வலயப்பொற்றோள் வெற்புறழ்குவவுக்கொங்கை
யாயிழைமகளிர்நேயத் தணையினுமவளையீன்ற
தாயெனக்கருதுகீரார் தூமனியமோட்டிற்காண்பார் கசு

பற்றிகலிலாதஞானப் பண்பினர்நட்டாற்பேணன்
மற்றவற்செறுக்கவுன்று வல்லமெய்த்தவத்தின்மேலோர்
முற்றுறமின்பதன்ப முன்புளதொடர்புடற்கென்
றற்றமின்மகிழ்ச்சிவாட்ட மகன்றநற்றுணிவின்மிக்கார் கஎ

கண்டிகைத்தலனுநீற்றுக் களபமும்பொலிந்தயாக்கை
மண்டிலச்சடிலக்கற்றை மவுலியர்நிறைந்ததெண்ணீர்க்
குண்டிகைதண்டேந்தாங்கு கையினர்குன்றவில்லி
புண்டரீகத்தாட்கன்பு பொருந்தியமனத்தர்மாசோ கஅ

கண்புனலொளிப்பிநெஞ்சங் கரைந்துகமயிர்பொடிப்பத்
தண்புனநீரித்தவேணித் தம்பிரான்பூசைசெய்வார்
நூண்பயின்மறைகளுன்கின் பயத்தவாமஞ்செழுத்தக்
கண்புடனுபகருகின்ற நாவர்முக்குற்றந்தீர்ந்தே

வேதன்மாறமையுமன்னூர் வியன்பதந்தனையுங்கொள்ளா
ராதிநாயகனெம்மீச னருளினுலவர்தஞ்செய்கை
யாதுமோர்கிரணநாதன்னை யீடற்றிடகிறுவவல்லா
ரோர்துறநுதிநிகனைக்க ணுவகையும்வெறுப்புமில்லார் ௨௰

ஆதரவின்சொற்றூய்மை யருணெறியொழுக்கமெய்ம்மை
மேதகவுடையர்தீமை விரகம்பொய்யாசைகோபங்
கசதரவிலர்வேதாகமக் கருத்துணர்பெரியர்செம்பொற்
பூதரவில்லிதாளும் புகழுநிறைஞ்சுதற்குநேயர். ௨௧

வேறு. இப்பெருமுனிவர் தம்முண்முன்பொருநாளிருந்த
வக் காசிபன்வசிட்டன், புறப்புறமசடிலக கௌதமன்பாரத
துவாசனகண் ணுவன்சவுனகனே, மெய்பபுலத்தியனற் சனக
ஞாதன்வான் மீகன்சா தாதிபனுதி, யொப்பிலரநேகர் திருமி
யவ்வனத்தி னொருபுடை வரியீராயிருந்தார். ௨௨

இருந்தவர்சநந சாகர........ னையறுபரசிவ கதியிற்,
பொருந்தினற்கன்றி யாரிடுனத்தமது புந்திகொண்டனைவரு
மததான், வருந்திறமுயல்வ தெந்நெறியென்ன மற்றதையா
ய்ச்சருசாவ, கருநதநிசொருநன் முதுக்குறைவதனலடி
கள்கேண்மின்களென் றறைவான். ௨௩

வேறு. எவ்வுகைப் பொருள்களு மீயவல்லது
செவ்விய தவமதே தெரியின் வேறிலை
இவ்வுல கினிலஃ தியற்று கின்றதே
யிவ்வுட லெடுத்ததபே ருறுதி யென்பவே. ௨௪

தவத்தினி லமர்புரி சயனை வெல்லலாந்
தவத்தினி லெழுகடற் றனையு முண்ணலாந்
தவத்தினில் வடவரைக் கனந்து தாங்கலாந்
தவத்தினி லனலமுந் தரிக்க லாகுமே. ௨௫

நன்றிகொ ...க்கிலம் ஆத நல்கவுந
துன்றிய வுயிர்தொகை தோற்று விப்பவு

நைமிசாரணியச்சருக்கம்.

மன்றிய வுலகுயா வுடைய மன்னர்க்
கொன்றருள் புரியவு மொருங்கி னெய்துமால்
அண்டமும் பொருள்களு மடங்கு பேருருக்
கொண்டிட னுனெனக் குறுக வாழ்புனல்
மீண்டமுன் மிசைசெல விளிவிலா துற
வொண்டவ மன்றியா துதவ வல்லதே.

பொன்றணி மார்பகப் புனித னாதியை
நின்றுழி தவத்தினு னினைந் தகழ்த்திட
சங்கரியு மைற்கரி தாய வெள்ளியங்
குன்றிறை சரணமுங் குறுகலாகுமால்.

ஆதலினெப்புயர் வகன்றுதன்னைநேர்
மாதவமேசெயும் வழக்க மாமென
ஓதினன் வதிட்டனுங் குணர்த்த நின்ற,
தாதியா னினையன சாற்றன் மேயினன்.

வேறு. கா... ிணையில்பொருடரையிடத்தவ
லொரு... வானிலை... னயுதவி விண்ணுலகினுமுடன்மே
யருமையின்பமுய்த்தகற் செறுமெனினறமே
இருமையுந்துணையாகு வதன்றிமற்றிலலை
புகழுங்கல்வியுஞ்செல்வமும்வீரமும்...வும்
மகிழுங்கோலமு மொழுக்கமும்விழுப்பமும்முங்கி
இகழும்பாவமும்பழியுநீத் தானுமையிடத்திற்
றிகழும்பூதனுயவாருள் செய்யவுஞ்செய்யும்.

வற்றின்மேல்வருமெங்கைதன் னெழிலுருவமா
மாற்றிலன்னதேயாற்றுக வென்றவனறைய
நீற்றின்மேனியிற் கண்டிகைமாலைகணிரம்ப
வீற்றிருந்திடுங்கவுதம னினையனவிளம்பும்.

மனைகடோறுமுற்றிரந்திடு கபாலியுண்மகிழ
வனைகமால்விடை யூர்ந்துவக்தெளிதிரிவருளச்
சினைகருங்கடலுலகினிற் செய்வதுகருதில்
...ர்த்திதானமே யன்றிவேறுளதே.

கூவத்துப்புராணமூலம்.

அரியவாகியகலைகளியா வையும்பயிலறிஞர்
பெரியமாதவருயர்தரு குலத்திடைப்பிறந்தோ
ருரியதானியைப்புகழ்ந்தன ருறுவரவ்வளவோ
தரியலார்களுமுறிவுசெய் தவன்புடைசார்வார். ௬௫

சூழும்வான்முகிலெனப்பயன்றூக்குறுதளிப்போடு
பாழிமாபுகழ்ப்படலை போய்ப்பரந்திடுமுலகீ
ரேழுமாமயன்மான் முதலிமையவர்தமிற்றும்
வாழுமேம்பதமனையென வாக்குறமலைவார் ௬௬

இகத்தினன்கொடைப் பெருமையை யறிந்துளோ ரறிந்திடன்
றகத்திறைமமு முறைசெய்வோரவரரிதாகித்
தொகுத்தவோர்பொருட்டினலகுவரெனச்சொல்ல
மிகுத்தவாவியுங்கொடுப்பரால் வேண்டுமுன்விரும்பி ௬௭

புவியினன்கொடையில்லவர் ரேற்றத்தின்பொலிவு
கவிர்மலர்த்திடற்கொப்பெனக் கழறுவரதனு
லவிர்பெரும்புகழ்க்கொடையதேயதிகட
சவிதருஞ்சடைக்கௌதமன் காசியன்சாற்றும்

உவமந்தீர்ந்திடும்வாய்மையொன்றேயுறி னுலகிற்
றவமுந்தானமுமொருங்குறச் செய்தவிற்றலையாப்
பவமகன்றுநான்மறைமுடிவாகியபரம
சிவனரும்பதம்பெறும்பம யுயர்த்திடுந் தெரியின்

இரவிவாண்மதியுசித்தொடுங்குதலொலியியங்கல்
பரவைதானிகவாதுறல்பயோதரம் பொழிதல்
கருவினூடுவந்தமர்தல்பின் றோற்றுதல்காயத்
தருவமாமுயிர்நிற்குதல்வாய்மையினன்றே ௬௯

மன்னனுரியவாயுலமகலாமபுரந்தடவானு
மின்னருனுழந்திடலும்விட்டிறந்திடவரினும்
நன்னுவாய்மையிற்பிறழ்ந்திடாதொழுகவிப்பவம்போய்
இங்ஙனஞ்சடையெம்பிரான்பதம்புகவேண்டில் ௭௰

நைமிசாரணியச்சருக்கம்

என்றுகாசிபமுனிவரன்வாய்மையினியல்பை
யொன்றவேவிரித்தருந்தவர்தங்களோடுரைப்ப
வன்றுசார்ந்துளும்பரத்துவசப்பெயரறிஞன்
குன்றுபோலுயர்குணத்தினீர் கேண்மெனக்கூறும்

விண்ணுளோர்தமக்க ளியுறுமகிழ்தாவினைத்து
மண்ணினுருயிர்க்கெழிலிகொண்டுணவினைவழங்கி
யெண்ணிலெவ்வுலகிற்குமின்பீந்துநற்றுணம்
புண்ணியந்தம்வளர்த்தலான்யாகமேபெருமாம்

வேறு. இரதிகொண்கனெழிலுருவட்டவன்
பெரிதுமுன்மகிழ் பெறறிடச்செப்பினது
சுருதிசொன்மகவென்றவன் சொற்றிடக்
கருதியொன்றுகண்ணுவன் கூறுவான்

இல்லொழுக்கமியைந்து பிதிர்க்கட
னெல்லும்வண்ணமுஞற்றி மரபுளோர்
செல்லுஞ்சீரினைப்பதுயர் சிந்துவான்
வல்லமக்கட்பெறற்கிணை மற்றிலை

மெய்த்துகின்றவிழுமிய சீர்த்தியோ
டெய்த்தலின்றியிருமையின் புந்தரும்
புத்திரர்ப்பெறும்புண்ணிய வாழ்க்கைதான்
நற்றவத்தினுமாற்றச் சிறந்ததே

என்றுநன்மகப்பேற்றையினிதெனக்
கன்றிநற்றவக்கண்ணுவன்சொற்றிடக்
கொன்றையஞ்சடைக் கூத்தனைப்போற்றியே
யொன்றுமெய்த்துருவாசனுரைசெய்வான்

உறவுதந்தைதாயொண்டொடிமாதரார்
சிறுவர்வண்புவிசெல்வம்பெரும்புகழ்
பிறவினும்படுமாசைபிரிந்தமெய்த்
துறவினல்லது துன்பமகலுமோ

வேறு. ஈட்டிடுங்காலையினேமஞ் செய்வுழிக்
கூட்டலிற்றுயிரினைக்குறுகுஞ் சுற்றமும்
வாட்டிடும்பகைஞராய்வதை செய்வித்தலான்
வேட்டிடும்வெறுக்கையை வெறுக்கையின்பமே

கொடுங்கனன்மதுவிடங்குறுகினுண்டிடிற்
சுடுங்கருத்தழித்திடுந்துலைவு செய்யுமாற்
கடிந்துபார்க்காமமோ கருதினன்னசெய்
திடும்பிணுக்குடர்ந்துவெந் நிரையத்திட்டிடும்

ஆதலிற்பெண்முயக் கா[illegible]நீங்கியே
தீதறத்துறந்திடுமரிய செய்கையே
மேதகக்கதியினில்விடுமென் றோதினான்
மாதவத்துயர்தருவாசமாமுனி:

இனையனவீற்று வீற்றியம்பிமாதவர்
வினையறுநன்னெறி தெரியுங்காலையி
லனையவர்தவவுருவாகிநண்ணல்போற்
றுனியிறவாயிடைச்சுதன் றோன்றினான்

கண்டிகைவடமுரங்கவினீற்றொளிர்
புண்டரநுதன்மிசைப்பொலிய வங்கையிற்
றண்டொடுகமண்டலந் தாங்கிவந்திட
வண்டவர்சுதனல் வரவுகண்டனர்

பொருக்கெனவெதிர்கொடு போற்றிக்கொண்டுசென்
றருக்கிளராதனமுதவி யையநீ
இருக்கெனவாயிடை யிருத்திமாதவ
ரருக்கியமுதலனவளித்துக் கூறுவார்

தூய்யமெய்க்கதி[illegible]பறுஞ் சுட்டியாய்த்தியா.
மையமுற்றிருந்தழிபடி[illegible]சேட்கையான்
[illegible]ற்றமுங்குசேரமாட்டுமோரல்கொண்
டுங்கொ[illegible]னைத்தரவருபவரி றுற்றனை

தொல்லையம்புராணநூற்பெருகுதி யாவையும்
வல்லநன் முனிவநின்வரமி னுய்ந்தனை
நல்லவர்தாம்பெறு நலத்த கல்வியுஞ்
செல்வமும்யாவருஞ் சிறப்பிற் பெற்றனை ௨௫

வாதராயணன் முனிவரனை யொத்தமெய்ப்
போதநாயகனருட்பொழியுஞ் சேமமுகச்
சூதமாதவவினைத்தொடர்பு போய்ச்சிவன்
பாததாமரைபெறும் பரிசுகூறென்றார் ௨௬

வேறு. என்றலுமுவகைநெஞ்சத தெழுந்திடச்சூதனீர்வே
றொன்றொருபொருளுமுன்னாதலப்புராமுத்தியெய்தக்
கன்றினீரதனுறும்பாற்கன்றுத லருள்பதிந்த
தின்றுமையடங்கியானுமுய்ந்தனனென்றுசொல்வான் ௨௭

அரியதாமவிச்சைமூவாறவைமறை நான்காறங்கம்
கருமநூ லைங்கள்சொன்னான் மிருதிசந்துருவம்வின்னூல்
பாரதம்வாதகூடம்புராணம்பஞ்சாதன் னியாயமென்ன
விரிதருமிவற்றுட்சீர்சால் புராணமேமேலதாகும் ௨௮

பன்னும்பபுராணமீரொன்பானெனும் பாகுபாட்டான்
முன்னுறுதலைமைக்கேற்பமுக்கணெம்பிரான்சீர்ஞர்ந்து
சென்னிகாபடிவற்கு நான்குதிசைமுகற்கிரண்டுசெங்கேழ்
துன்னுறுகனலியென்போன் சுடரினுக்கொவ்வொன்றாமே ௨௯

அவையவற்றதிகமெல்லாஞ்சைவமலமாக் கதையிலைந்து
தனிசிறப்பவற்றுட் காந்தமதனினுமிலத்தகம்மா
தனிவருசனற்குமாரசங்கிதையதனுட்சால
வினியதுதாளிகாண்டமென்பர் மூதறிவின்மேலோர் ௩௰

அன்னதிற்சிவயாது னெங்கோனருளினாற்றுயேன்கேட்ப
தன்னிகரில்லாசமுதசிசார்ந்தீட்டிற் சேதுத்தன்னை
முன்னமங்குரைத்தானன்றுன்மொழிந்தவாறுமக்கியான
னுவனுடம்பெய்தபயன்பெறு முனிவர்கேண்மின ௩௧

இச்சிறைப்பலங்கணீங்கியிணையிலாமுத்தியெய்தன்
மெய்ச்சிவஞானத்தன்றிவேறுளகருமத்தாகா
தச்சிவஞானம்பெற்றோரயனதுகற்பமுற்றுச்
சச்சிதானந்தமுத்திசார்குவ ரென்பமாதோ ௬௨

பிறைமுடிக்கின்றமுக்கட் பிரான்றிருத்தலங்கடன்னி
லறமுடிப்பவர்துறந்தோ ரறிஞரஞ்ஞானபாவத்
துறைமுடிக்கிற்போரேனுந் தூசிசெலாமெய்யீதுநீத்து
மறைமுடிக்கரியஞான மன்னிமெய்த்தறிபிறசேர்வார் ௬௩

கலியுகமலமெய்ஞ்ஞான மருவிடவேண்டிற்சாந்தப்
புலியுகனைத்தான்போற்றிப் பொதுநடம்புரிவோன் ஞானவ
கலியுகமதனிற்சாலக் கதித்துறவேண்டும்பாம்பி
னொலியுகவணையிசைப்பே ரிருந்தவனைதநீரொன்றன்

சூதமாமுனிவனின்ன சொற்றிட வுவகைபூத்தத்
தீதிலாமுநிவமுத்தி சிவனிடமளிக்குமென்றாய்
வாதராயணன்மலர்த்தாண் மருவுமாறுக்கர்தம்மு
ளோதியாலுயர்ந்தோயசொல்வதொன்றுளதென்றுசொல்வா

தண்ணிலாமலர்ந்தவேணித் தாணுவுமுமையுந்தங்கட்
கண்ணுலாமுக்கணோடுங் கைகலைபோலிருப்பதாகி
யெண்ணிலாவமரர்வெள்வி யிறையயன்முராரியென்று
முண்ணிலாமூவகையோடு மூவர்த்தொழுதமர்வதாகி ௬௬

அளப்பருமனந்தகோடி யமலமெய்த்தலங்கடோறுங்
கொளப்படும்பயன்கண்முற்றுமெளிதினிற்கொடுப்பதேயாய்த்
தளப்பதுமத்துமேலோ னந்தினுநந்தாதாகி
யுளப்படுபோகமுத்தி யொருங்குறவுதவுஞ்சீர்த்தாய் ௬௭

கங்கையாதிகளின்மிக்க காமருபுனிததீர்த்தந்
தங்குவதாகியுலகிற் சாற்றிடல்வினைவிற்செங்கேழ்ப்
பங்கயாதனத்தன்மாயோன் பதர்சாலல்லதாகி
இங்கொருதலத்தையைய வியம்புதியெங்கட்கென்றார்

என்றுரைத்தலோடு மெழுந்தபேருவகைபொங்க
குன்றவிற்கோலதெம்மான் கூடுபுரங்கருதியுள்ளங்
கன்றுறுமன்னைநெஞ்சிற் கனிந்துகமயிர்பொடிப்ப
மென்றுளிவிழியரும்ப விதிர்விதிர்த்தினையசொல்வான் ௩௯

ஆருந்தவமுனிகணீவி ரறைந்தனமுழுதும்பெற்ற
பெருந்தவமுளதொன்றம்ம வதனதுபெருமைதன்னைப்
பரந்திடுமுகங்கள்கோடி படைத்தலையரவப்புத்தே
ளிருந்துரைப்பினுமடங்கா தியான்சிறிதறிந்தசொல்வேன் ௪௰

நைமிசாரணியச்சருக்கம்-முற்றிற்று.
பாயிரம் உட்பட விருத்தம்-௪௰

திருச்சிற்றம்பலம்.

நைமிசாரணியச்சருக்கவசனம்.

குளிர்ச்சிபொருந்திய கடலினாற் சூழப்பட்ட இவ்வுலகத்தின்கண் பலவிதவிருக்ஷங்களினாற் சூரியகிரணங்களையும் பனியையும் மழையையும் தடைசெய்து மிகுந்ததவத்தைச் செய்வோர்களுக்கு வாசஸ்தலமாயிருக்கப்பட்ட நைமிசவனமென்றொருவனமுண்டு.(நேமியென்பது) நைமியெனத்திரிந்துநின்றது. நேமி - சக்கரம். பேரகத்தியம் வடபதப்படலம்- ௨௰- ௩- சூ. இகர ஒகார முதற்கையாகும். என்னுஞ்சூத்திரத்தாற்காண்க. முற்காலத்தில் தேவர்கள் தங்களுக்குத் தவஞ்செய்யும் பொருட்டுத் தகுந்த இடமொன்று நேமித்துத் தரவேணுமென்று, பிரமதேவனைச்சென்றிரப்ப அவர் ஓர்தருப்பைப்புல்லை வட்டமாகச்செய்து இதுபோய்த் தங்கு

நிடம் தவத்திற்குத் தகுதியையுடையதென்றுகூறினர்.
இவ்வாறே அந்தத்தருப்பை வட்டாகாரமாய்ச் சார்ந்தி
ரி[illegible]ரானது [illegible]சவனமென்று கூறப்படுகின்றது.)
இவ்வனத்திற் பொன்போன்ற மகரந்தங்களைச் சிதறு
மலர்களையுடைய கற்பகத்தருநிழலின்கண்வசிக்குந்தே
வேந்திரன் தனது தேவபோக மின்னற்கொப்பா யழிந்
துபோகத்தக்கதென விடுத்து அழியாவின்பமாகிய பே
ரினமைந்தத் தாவேண்டுமென புரார்த்தேஸ்வரனைத்
தோத்திரிப்பாராயின இதனது சிறப்பை மற்றெவரால்
சொல்லத்தக்கது. இவ்வரியவனத்தில யோகிகளெப்போ
ளபோகிகளுநர் ஐம்பொறிப்பகைகளைவென்று தவத்தை
ச்செய்வார்கள். எலியும் பாம்பும் மயிலும் பச்சோ
ந்தியும் யானையுஞ் சிங்கமும் மானும் புலியும் தம்மிற்
பகையின்றி யிருக்கும். சிவயோகிகளில் இன்பதுன்ப
ங்களுடற்கேயன்றி யுயிர்க்கில்லையென்று விருப்புவெறு
ப்பற்று அரியதவங்களிற் றுணிவுற்றிருந்து சிவசாதனங்க
ளாகிய விபூதி ருத்திராட்சங்களணிந்து நீண்ட சடைக
ளை வட்டமாகக்கட்டிக்கொண்டிருப்பவர்களும், தெளி
வாகிய நீர்நிறைந்த கமண்டலத்தையுந் தண்டையுந்
தாங்கிக்கொண்டிருப்பவர்களும், மஹோப்பேருவை வில்
லாதவுடைய பரமசிவத்தின் பாததாமரைகளினன்புமிகு
ந்து தியானித்துக்கொண்டிருப்பவர்களுமா யிருப்பார்
கள். அன்றியுங் கண்களினிடத்தில் நீர்பெருகவும் ம
னமிகுந் துருகுதலைச்செய்யவும் உரோமங்கள் பொடிக்
கவுங் கங்கையைச் சடாபாரத்தில் தரித்திருக்குஞ் சிவபெ
ருமானினது கிரியாபூசையைச் செய்வோர்களுக்கு, க்ஷேமமி
குந்த வேதத்திற்சொல்லும் பஞ்சாட்சரத்தை விசுவா

சதமோடு ஜபித்துக்கொண்டிருக்கும் நாவையுடையவர்களும் (ஆணவ மாஷ்ய காமிய மென்னு) முக்குற்றந்தீர்ந்தவர்களுமாயிருப்பார்கள். பிரம விஷ்ணுக்களுக்கொப்பாகிய பதப்பிராப்திகளையும் விரும்பார்கள். ஆதிநாயகனுகிய எமதீசனதருளினுல் எவ்வித சிருட்டிகளையுஞ்செய்யத்தக்கவர்கள். பிறராற்சொல்லத்தக்க புகழ்ச்சியிகழ்ச்சிகளைப் பாராட்டாதவர்கள். இரங்தோர்களை யாதரிக்குந்தன்மையும் பரிசுத்தமாகிய சொற்களையும் அருண்மிகுதியையும் நல்லொழுக்கத்தையும் வாய்மையையுமிகுத்துடையவர்கள். தீங்கினையுங் காமவிச்சையினையும் பொய்மையையும் போராசையினையும் சோபத்தினையும் விரும்பாதவர்கள். வேதாந்தக்கருத்தினையுடைய பெரியோர்கள். ஞிறைவில்லியினது தஙங்களைச்சென்று பணியும் விருப்பத்தையுடையவர்கள்.

இவ்விதமாகிய முனிவர்கூட்டங்களுள் முன்பொருகாலத்தில் மிகுந்த தவத்தையுடைய காசிபர் வசிட்டர் செவ்விதாகிய ஜடாபாரத்தையுடைய கௌதமர் பாரத்துவாசர் கண்ணுவர் சௌனகர் உண்மையாகிய புலத்தியர் ஜனகர் நாரதர் வால்மீகர் சாதாதிபர்முதலாகிய வொப்பில்லாத அநேகவிருடிகளொருங்குசேர்ந்து அவ்வனத்தின் ஒருபக்கத்தில் வீற்றிருந்தார்கள்.

இப்படியிருக்குமகாவிருடிகள் பிறவிக்கடலைக்கடப்பது ஒப்பில்லாத சிவசாயுச்சியத்தைப் பொருந்திருக்கன்றி யரிதெனறுநினைந்து யாவரு மதுவருவழியெவ்வழியென்று ஒருவர்க்கொருவர் வினவுகாலையில் அருந்தமிமணுளனுகிய வசிட்டமுனிவர் இதனைக்கேட்பீர்களாகவென்று சொல்லத்தொடங்கினர்.

இவ்வுலகத்தி லெவ்வகைப்பயன்களையுந் தரத்தக்கது தவமேயன்றி வேறில்லை. அத்தவமே சகலவித சித்திகளைத் தருவதும் வெள்ளியங்கிரி வாசரது பாதங்களைப்பார்ப்பதற் கேதுவாயிருப்பதுமென் றருளிச்செய்தார்.

அப்பொழுது சாதாதிபர். தருமமே ஒப்பில்லாத பொருள். அத்தருமமே இருமையின்பத்திற்குக் காரணமானதும் விருஷபாரூடராகிய பரமசிவத்தினதுருவமாகப்பட்டதுமாதலால் அத்தருமத்தையே செய்தருளல்வேண்டுமென்று செப்பியருளினர்.

விபூதிருத்திராட்சங்களணிந்துவிற்றிருக்குங்கௌதமமுனிவரானவர் கபாலியானவருண்மகிழ்ந்து குற்றமில்லாத பெருமைபொருந்திய விருஷபாரூடராகவுந் தருளிச்செய்வது தானமேயன்றி வேறுண்டோ, தானமே பகைஞர்களையுறவாக்கத்தக்கது. தானத்தின்பெருமையையறிந்துள்ளோர்கள் தன்னையிரப்போர்கள் வேண்டுமுன் தங்களுயிரையுந்தருவார்கள். தானத்தைச்செய்யாதவன்தோற்றமானது முண்முருக்கம்பூவைப்போல் பிரகாசமுடையதாயிருந்தும் வாசனையில்லாததற்கொப்பாவார்களென் றருளிச்செய்தார்.

காசிபருஷியானவர் உவமையில்லாத வாய்மையொன்று சொல்லப்படுவதே பரமசிவத்தி னரிய பதத்தைத் தரத்தக்கதும் இருமைக்குந் துணையாயிருக்கத்தக்கதுமென் றருளிச்செய்தனர்.

பரத்துவாசரானவர் மலைபோன்ற குணத்தையுடையவர்களே கேளுங்கள் தேவலோகவாசிகளுக்கியா

காரிங்களைச் செய்து அபாபபாகாதாது அதனால் மண்ணுளோர்க்கு மழை முதலாகிய வளப்பங்களைக் குறைவுபடாமல்வளர்ப்பித்துப் புண்ணியத்தைப்பெறச்செய்வதே காமதகனமாகிய சிவபெருமானினது திருவடியையடைவிப்பதாகுமென்றருளிச்செய்தார்.

கண்ணனுவரானவர் இல்லொழுக்கத்தைக் குறைவறநடத்தி பிதிர்க்கடனளித்துத் தம்மையுள்ளோர் செல்லும் மிகுந்த நரகத்தினின்றும் நீக்குவதாய புத்திரரைப்பெறுவதே தவத்திலுயர்ந்ததென் றருளிச்செய்தனர்.

துருவாச மஹாமுனியானவர் கொன்றைமாலையணிந்த சடையையுடைய கடவுளைப் போற்றித் துறவே சகலத்திலும் மேன்மையுடையது. இல்லறமுதலானவை துன்பத்தைத்தருவது. ஆதலால் பெண்போகமுதலியனவைகளைவிட்டுத் துறவடைவதே மிகுந்தமோக்ஷவீட்டினில்விடத்தக்கதென றருளிச்செய்தனர்.

இவ்விதமாக மிகுந்த தவத்தையுடைய முனிவர்கள் குற்றமற்றதோர் நன்னெறியை யாராயும்பொழுது அவர்கள்தவமே யுருவமாய்த் தோன்றியதுபோலசூதமாமுனிவர் ருத்திராக்ஷமும் பூணுநூலும் மார்பினிடத்திற் பிரகாசிக்கவும், திரிபுண்டர நெற்றியிற்றுலங்கவும், அழகிய கையினிடத்தில் தண்டுகமண்டலந்தாங்கிக்கொண்டுவரவுங் கண்டு எதிர்சென்று தோத்தரித்தழைத்துவந்தழகிய ஆசனத்திருத்திச் சோடசோபசாரங்களைச்செய்து சிலவற்றைச் சொல்லத்தொடங்கினார்கள்.

ஐயனே, பரிசுத்தமும் முண்மையுமாகிய மோக்ஷத்தைப்பெறும் உபாயத்தையாராய்ந்து சந்தேகித்திருக்

ருங்காலையில் மிகுந்த பசிவேதனையையுடையா னொரு
வனுக்கு அன்னத்தை மிகுந்த வேக்கமத்தோடுவந்துதரு
வோர் தகுதியையொத்தனை. பழைமையாகிய புராண
ங்களையாராய்ந்த தன்மையுடையவரோ, நும்முடையவரா
வினால் நாங்கள்பிழைத்தோம்; இதுவேநல்லோர்கள்பெ
றத்தக்க கல்வியுஞ் செல்வமுஞ் சிறப்பையு மொக்கும்.
வியாதராயணமுனிவரையொத்தவரோ, அருட்டன்மையு
டைய சூதமாமுனிவரோ, அடியேங்களது வினைத்தொ
டர்பு நீங்கிப் பரமசிவத்தின் பாததாமரைகளை யடையு
முபாயத்தை யருளிச்செய்வீரென்று வினவினார்கள்.

இவ்விதமாக வினவுங்காலையில் சூதமுனிவரர் சந்
தோஷித்த நெஞ்சத்தராய் வேறொருபொருளையுமுன்
னது முத்தியடையும் வகையை நினைந்தீர்களாதலால்
நுதலிற் கண்ணையுடையோனதருள் நும்பாற்பதிந்தது;
யானு மகிழ்ந்தனனென்று சொல்லத்தொடங்கினார்.

தபசிரேஷ்டர்களே, அரிதாகியவிச்சை பதினெட்
டுள. அவை நாலுவேதம் ஆறங்கம் கருமநூல் ஞானங்
களைச்சொல்லுநூல் ஸ்மிருதி கந்தருவநூல் வில்நூல்
பாதம் வாகடம் புராணம் சொல்லாநின்றநியாயமென
வுஞ்சொல்லப்படும். இவற்றுள் புராணமே மேலானது.
அப்புராணம் பதினெட்டாகும். அப்பதினெட்டினுள
அவரவர் முதன்மைப்பாட்டினிற்கேற்ப அனுகங்க
ளையுடைய சிவபிரானுக்குப் பத்து. காவற்றொழில்
பூண்ட விஷ்ணுவிற்கு நான்கு. திசைமுகனுக்கிரண்டு.
சூரியனுக்கும் அக்கினிக்கு மோவ்வொன்றும். அவற்
றுள் எமது பரமசிவத்தினது குற்றமற்ற பதின்புராண
மே மேன்மையையுடையது. அவற்றுள் ஸ்காந்தபுரா.

ணமே மேன்மையுடையது. அக்காந்தத்துள் சனற்கு மாரசங்கிதை மேன்மையுடையது. அச் சங்கிதையி னுள் மிகுந்த வினிமையைத்தருவது காளிகாண்டமெ ன்றறிவின்மிக்கோர் சொல்லுவார்கள். அவ்வித கா ளிகாண்டத்தி லெமதாசாரியரது கிருபையினால் யாம் கேட்ப ஒப்பில்லாத முத்தியையடைவதற்கோர்மகாந் திர மளித்தருளினார். அதனை அவர்சொன்னபடியே யு ங்களுக் கியான்சொல்லுகின்றேன். இச்சரீரத்தைபெறு தற்குடையவேண்டு முண்மைப்பயனை யடையு முனிவர் களே கேண்மின்கள்.

இவ்வுடலிற் சிறையிட்ட வுயிரானது பாவங்களி னுணீங்கி முத்தியடைதற்குச்சிவஞானத்தாலன்றி வே றொரு கருமத்தாலு முடியாது. அச்சிவஞானத்தை ய டைந்தோர்கள் பிரமகற்பமுடிவிற் சச்சிதானந்தமுத்தி யை யடைவார்கள். அவ்வித சிவஞானமானது சந்திர சேகரனுகிய முக்கட்பிரான் திருத்தலங்களில் நல்லறத் தைச் செய்வோர்களுக்கும், துறந்தோர்களுக்கும், அறி வுள்ளோர்களுக்கும், அஞ்ஞானத்தை விட்டோர்களுக் கும், சகலபற்றுக்களையு மெளிதில்நீத்து வேதசிரசிற் கெடாத ஞானத்தையடைவித்து உண்மையாகியமோ க்ஷத்தையடைவிக்கும். இக்கலியுகத்தினில் மிகுந்தஞா னத்தைப் பெறவேண்டில் சாந்தத் தன்மையுடைய வி யாக்கிரமபாதர் போற்றும் சிற்சபையில் நடனஞ்செய் தருளும் சபாபதியின் உண்மைஞானத்தையே கசிந்து ருகுதலோடும் பெறவேண்டும், நைமிசவனத்தில் மிகு ந்த தவத்தையுடைய முனிவர்களேயென் றருளிச்செ ய்தார்.

இவ்விதமாகசூதமுனிவர்சொல்லியருளவே,நை
மிசவாசிகள்சந்தோஷித்துவாதராயணனைப் போற்றும்
பூரணக்கருட்சிறந்த சூதமுனிவரே யாங்கள்சொல்ல
வேண்டுவதொன்றுண்டென்று சொல்லுவார்கள்.

குளிர்ச்சிபொருந்திய சந்திரன்றவழாநின்ற சடை
யையுடைய பரமசிவமும் உமையம்மையும் அவர்தம்
மக்களுங் கைலையைப்போல் வீற்றிருப்பதாய், எண்ணி
ல்லாத மகங்களுக்கிறைவனாகிய தேவேந்திரனும் பிரமா
வும் விஷ்ணுவுமென்றுஞ் சந்தோஷத்துடன் அவர்க
ளைத்தொழுது வீற்றிருப்பதாய், அநேகபரிசுத்தமாகிய
தலங்களுள் பெறப்படும் பயன்களெல்லா மெளிதினிற்
கொடுப்பதாய்,தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவனை
யீந்தபோதினுமழியாததாய்உண்ணப்படும் போகமுத்தி
களை முழுமையுமளிப்பதாய்,கங்கைமுதலாகிய தீர்த்த
ங்களினு மேன்மையாகிய தீர்த்தமுடையதாய், நினைக்
கினுஞ் சொல்லினும் விசாரிக்கினுஞ் சிவந்த தாமரைம
லரோனுடைய பதத்தையும் மறைவிஷ்ணுவின் பதத்
தையுந் தரத்தக்கதாயிருக்கு மொருதலத்தை யிவ்வி
டத் தெமக்கருளிச்செயல்வேண்டுமெனவினவினார்கள்.

இவ்விதமாய் நைமிசாரணியவாசிகள் கேட்டவுட
ன் மிகுந்த சந்தோஷமிகுந்து குன்றமாகியவில்லைக் கை
யிற்கொண்டருளியதிருவிற்கோலப்பெருமானாகியவெ
ம்மான் வீற்றிருக்குங் கூவத்தை நினைத்து நெடிதுநீங்கி
யகுழவியைக்கண்டதாய்போல் மிகுந்துருகிமயிர்பொ
டிப்ப விழியில் நீர் சிறியதுளிகளாக வருப்புதல்செய்ய
வேர்வையிட விவ்வார்த்தையைச் சூதமுனிவர் சொல்
லுவார்.

அரிதாகிய சகல சாஸ்திரங்களையுமுடைய முனிவர்களே நீவிர் கேட்டருளிய தலமாகிய ஸ்ரீமுஷ்ணம் பெருமையுள்ளபெரியதலமானபடியால் அதனைப் பார்த்திருக்குங் கோடி முகங்களையுடைய ஆதிசேஷனுக்குந் தாமரைநாபனுக்குஞ் சொல்லவரிதாம் அதனைச் சிறிதெனக்குத் தெரிந்தபடியாக நான் சொல்லுகிறேன்.

நைமிசாரணியச்சருக்கவசன முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

உ—வது

திருத்தலச்சருக்கம்.

பண்டொரு சேதனைப் பரியமெய்யக்கதி
கண்டிடா ஈசனை உருவனைக் கோருகோ
சட்டம தசரூப தலத்தை யச்செழுச்சரு
கொண்டாடி னருட்டணி தொகுத்துக்கூறுவாம்

வெ-ரை. வாய்த்தசகாரம்புணர்சாடியினவெண்டாம்வடங்கத
சோயதனுவாணமேலகடலைமேகூடிவில்தரலிரிகத்துப
பொரத்தநமேபணியினிசருதலைவலைபுபலக
ளீசதவ பரிப்படிந்துகார்றமொடுபெராது.

விண்ணுலாவிப் புழைக்கைபோன்முகில்வினையேயை
கண்ணுலாவியகுல நீதிநிலங்களையிற்
றண்ணுலாவி வெளிபுரி சலதிமுகத்து
மண்ணுலாவியமதகரி போனமெனவுந்த

வேறு. சிந்துரந்திருத்தென் கயிலாயம்வா
ழெந்தைதன் முடியீர்ம்புனலாட்டல்போ
னந்தியம்பெரு நாகச்சிகரிமேல்
வந்துநின்றும்மழை முகில்பெய்தவே

கோடுகொண்டுயர் குன்றினுநின்றுநீர்
மாடுதுன்றுமணியோ டிழிந்திட
லாடுமங்கதமண்ணன் முடியைவி
டோடுகின்ற வியல்பினையொத்ததே.

கடியமன்னர் கவர்ந்துகொண்டேகியே
விடில்விளைந்ததும் வீழ்நகர்செல்பவர்
படியதென்னப் பயோதரம்பெய்புன
னெடியமைக்கட னேடிநடந்ததே

காரடைந்து காராவின்முழினைச்
சீரடைந்து சிலம்பிற்பொழிதலீ
மேரடைந்தபால் யாரொன்றுரும்பெரும்
பேரடைந்து புவியிற்பெயர்ந்ததே

மெலியர்மேவு வியன்சிறைநீக்குபு
வலியர்வந்துமீட் டேகுதன்மானவே
யொலிகணித்தமென் கோடுடைத்தொல்லையிற்
பொலியும்வாவிநன் னீர்கொடுபோகுமால்.

வானமேயவலி கெழுகோளரா
வானவீரைங்கதி ரென்னவங்கார்திடற்
கானமோடி கடுங்கிரையாலெடுத்
தேனமாமருப் பெற்றுமன்னீதமே

சலவிரும்புனற் றுண்டைநன்றூட்டினி
னிலவலிங்க ணிரம்புவதன்றியும்
புலமிலங்கும் புதுமணியாதிய
மலைவளங்களுந் தந்திடவந்ததே.

குங்குமங்கலந்தரா புறங்கூறுஞ்சுனை
தங்கிநின்றுறுந் தாதளைந்தோர்புறம்
பொங்குதண்புனற் போதுவதொண்மலை
மங்கைபாதிமணந் தவர்போன்றதே

வில்லிருந்தினை விண்ணுறண்குறுக்கிடும்
வல்லியொண்கணை செவ்விதின்வந்ததா
னல்லிநன்மூகையாக் கொடுவேலையோ
டொல்லும்வெஞ்சமர்க் குற்றிடல்போன்றதே

பெண்ணைசாய்த்துப் பெருகிக்காவேரியி
னண்ணியோதிம நன்கொடும்வைகைசேர்
தெண்ணுகம்பை யினைந்துமணித்திரண்
மண்ணியேகும் வளங்கெழுபாலியே ௧௬

வேறு. சிலம்படிமருவிச்சந்தத் திலகமுன்னெற்றியிட்டுப்
பொலங்கொடியிடைசூழ்காஞ்சி பொருந்திமென்னகின்மே
லார, மிலங்குறவளைகள்கைசேர்ந்திரத்தினப்பொற்பணிதாங்
காவுற், பலம்பயிலளகமோடும் பாலியாமடந்தைபோந்தாள்.

சேட்டிளவாளைதாக்கத் தெங்கிளநீர்மார்த்தாண்டன்
பூட்டுவெம்பரித்தேர்காறும் விசையினிற்பொத்ததெண்ணீர்
வேட்டவனிருந்தபாகன் விரலினிற்பற்றியுண்ணு
மூட்டுமூழெங்குற்றுலு மனைவற்குமூட்டிடாதோ.

துருக்கமுநறியசந்துஞ் சுடர்கெழுமணியுமுத்து
மருக்கிளர்மலருந்தாங்கி மதமுமிழ்கரிமேற்கொண்டு
பெருக்கமுற்றளவின்மாக்கள் பரவப்பேரியாற்றுவேந்து
பொருக்கெனக்கடலோர்காத மெதிர்புகுந்தழைப்பபோலும்.

நண்ணியபுறத்துமாசோ டாடியநரர்க்குமற்றை
யுண்ணிகழ்மனத்தழுக்கு மொருங்குடன்றீரும்வண்ணம்
மண்ணுபுமறித்துநண்ணுவகை புரிந்தமலநல்கும்
புண்ணியதீர்த்தம்பால்யாறல்லதுபுவில்யாதோ. ௧௭

தன்னையாதரவிற்கண்டோற் தங்கட்காதனமாநல்கப்
பொன்னிருட்சாலப்போது பொருந்தியாடினர்கடாங்க
வன்னிலையளிப்பச்சங்கமடுத்து வந்துட்கொண்டோர்கள்
பன்னகமணிதற்றியப் பரித்தொழுகுறுமன்னீத்தம் க௮

பொய்கையுங்கிடங்குங்காவும் புகுந்துலாம்பாலினீத்தஞ்
செய்களின்மள்ளரார்ப்பச் சிரமோராயிரம்பெற்றீசன்
வலகுமொண்கயிலைநண்ணி வலம்புரிமுழக்குங்கம்பன்
கைகளினிமிருப்பாங்கீர்க் கால்களினிவர்ந்துசெல்லும் க௯

தேஞ்சிலம்பிழிந்தபாலி தென்புனற்பரவமள்ளர்
தாஞ்சிலம்பியமோடார்த்துத் தலைத்தலைக்குழுமிச்செய்க
ளுஞ்சிலம்பகடுபூட்டி நல்லெழின்மாதர்தங்காற்
பூஞ்சிலம்பெனச்சால்கீறிப் புடைபரந்துழுவரன்றே. உ௰

அந்தகனிவருமூர்தி யன்னசெம்பகட்டேர்பூட்டி
யுந்தியங்குரப்பிமள்ள ருழும்பணைபெகிணஞ்சங்கைகத
தந்திடுமண்டமென்னச் சடக்கெனவெடுத்துவான்போய்
நந்தெனவிடுப்பவீழ்வ னளிமதிதவரலொக்கும்

சுரும்பினமிரியல்போகத் தொத்திட்கமலச்செப்பு
நிரப்புகட்கைமடுத்து நிறையவுள்ளெழுந்துமள்ளர்
விரும்புனற்றேக்கியான்ற வயலுழுதளைந்தசேறு
பரம்படித்திழுதுசெய்து பறித்தநாறெங்குநட்டார்

களைகளைவிப்பமள்ளர் கருதித்தம்மாதர்பாரார்
விளையமிர்தன்னீர்நுங்கள் விழியிதழ்வதனமோடு
முளரியொண்குமுதநீல முரணிநிற்கின்றவென்னு
வளைகலித்திடவேரோடு மற்றவைகளைதல்செய்வார்.

வேறு. முற்றிருளிர்வதி முகத்துழத்தியர்
உற்றிடவயலிலெய்ம் முறையுட்கஞ்சகள்
மற்றெமையிகலினோர் வருதலென்னென
வெற்றியுமறிந்திட வெழுந்தசேல்களே.

முண்டகங்களைமலர மொய்த்தபாங்கரி
லொண்டொடிமார்திரு வுருவமெண்ணில
கொண்டவைதொருமரிக் குறிஞ்சுநின்றென
மண்டுறுபெரும்புனல் வயற்கணிப்பரால். ௨௫

லைபுனற்றண்பணை யகத்துச்சென்னலோ
லைபுடையவுளைவுற வீர்ம்பசுங்கதிர்
லைபெறவெழுந்துமே னிமிர்ந்துதோன்றுவ
கொலைமதகரியினங் குசங்கள்போன்றவே. ௨௬

உண்ணியவந்துரு நாரையோடமே
னண்ணியவாளைபாய் நலத்தபண்ணையிற்
பண்ணியபயிர்பெரும் பாலிநாட்டுளோர்
புண்ணியந்தெரிவுற விளைந்தபொற்பினால். ௨௭

மேனிமிர்பசுஞ்சுருள் விரித்தசாலிகள்
பானிறைதருங்கதிர் பழுத்தகண்ணுறீஇக்
கூனிரும்பினைக்கரங் கொண்டரிந்தரோ
வானகடுருஞ்சிபோர் வகுப்பர்மன்னர்கள். ௨௮

ஏர்க்கதிர்வாள்கொடே யீர்வர்வீக்கிமெய்
வேர்க்கவங்கெடுத்துராய் வீழ்த்தியேத்துவர்
சூர்க்கரும்பகட்டினற் றுவைப்பித்தார்ப்பராற்
போர்க்களம்புகுந்துபோர் புரிநன்மன்னரே. ௨௯

வேறிருபலாலநீத் துலவைமேவுழி
மாறரும்பகடிகண் மாற்றிநெற்குவா
லாழிஞென்றவையருக் களித்துமற்றவைங்
கூறுநல்லறங்களிற் குலவிச்செய்வரால். ௩௰

வேறு.

பிரிந்தபடவாளகங்குழைக்காஞாவிழிபதாம் பிறங்குழு
ரல், பொருந்துகுள முலைபாணி யுநதி பு ழுந்தாட்கணைக்
காற் புறந்தாள்வாவி, பரந்திடுசைவை வள்ளை கயலாம்
பற்றரளமணி பணிலங்கண்ணி, விரிந்தபள்ளு சுழியல்
வன்வரால்சுபடமினை ஞருளம்விருப்பக்காட்டும். ௧௩

வானமெழுநிலைமாடத்தியக் தண்டகநாட்டரிவையர்தம்வத
நம்போலா, தானமுடனலமாவிப்பதுமமாமரைமலர்ந்
தே யொப்பவிங்ஙன, மானமர்வதெனறுக்கென் றழுந்
காறுமனமடையத் தீடத்தவாவிக், தேனவிழுமிதழ்
கமலச்செழும்போதினைறனைதழைச்சிலைதக்குமாறே.

வேறு. தண்ணம்பாசடைதுன்னுபுசார்ந்துள
கண்ணகன்புனற்காமருபைந்தடம்
வண்ணவெண்குமுதங்கண்மலாந்தன
விண்ணின்வந்தெழுமின்றிரள்போன்றவே. ௧௫

வாடுகின்றமருங்குல்வருத்துபூண்
மூடுகின்றமுகின்முலைமாதாரற்
பாடுகின்றஞிமிறுபரந்தெழ
வாடுகின்றனவம்புயவாவியே. ௧௬

வரிவியம்புனற்குடைபுமெல்லியர்மதர்மழைக்கண்
காவியெனவிதழ்க்குமுதமென்றுஷணங்கமலப்
பூவதென்றிருட்குழலினமென்றுப்பல்பொறிவண்
டாவல்கொண்டுவந்தணைதரப்பொருக்கென வாழ்வார்

கோட்டிருமபுனற்றடத்தினின்மூழ்கியேகுடங்கை
காட்டிலின்றிரிந்தோடிய்வோதிமங்காணு
வேட்டிலங்கியகமலமென்றதனிடையிழைப்
பேட்டினங்கணெஞ்சழுங்குறவஙிதையர்பிடிப்பார்,

குழைந்துவாவிநீர்படியுமோர்குளிர்மதிமுகத்தி
யடைந்ததாமரைமுகத்தினையயலைக்குமொண்மயிலா
மடந்தையேராரவல்குலைப்பிடிக்கும்வாரணம்போ
னடந்தகோதையைமடங்கலாமருங்குலணலியும்.

இன்னவாகியவளஞ்செழுந்தொண்டைநாடேமந்
தன்னிலாமொளிர்மதாணியர்மற்றுளதலங்கண்
மன்னருங்கரிற்சூழ்தரவழுத்தியமணியாக்
கொன்னுலாநடுநாயகமாவதுகூவம். ௩௮

வம்புமாமதயானைகளிரண்டொருவயிரக்
கம்பமேவுறக்கட்டுமையறங்களைக்காட்டுஞ்
செம்பொன்மாமதிற்காஞ்சிதென்றிக்கினிற்றிகழ
விம்பர்மேயதுதனக்கிணையிலாதவக்கூவம். ௩௯

தேங்குசோதிப்பாநவமணிபொன்கொடுசெய்த
வோங்குகோபுரமாடமாளிகையொளிரோம்ப
பாங்குசூழ்மதின்மண்டபந்தெற்றிகள்பலவு
மீங்குவாழ்தருமிந்திரநகரொனவிலங்கும். ௪௰

சோதிபெற்றவொன்பானெனுமணிகளுந்துவன்றி
மேதகப்பெருஞ்செய்குன்றுபற்பலவிளங்கல்
பாதலத்தராவிறைசிரம்பரித்தபன்மகுடம்
பூதலத்துமேற்புறப்படத்தோன்றுவபோலும். ௪௧

திங்கள்வாணுதலரிவையர்நடுநிலைசெறியத்
துங்கமாகியமரகதச்சிகரிகடோன்றல்
பங்கயாதனப்பெருறிபலமார்பகம்பயில
மங்குல்வான்முகடளவுநீண்முராரிகண்மானும். ௬௨

தெண்ணிலாவொளிர்மேனிலச்சேக்கையின்மாதா
ரெண்ணிநாயகர்தங்கலைநெகிழ்த்திடநாணி
மண்ணிவாள்விடுபதுமராகப்பணிமறைத்து
வெண்ணிலாவிருள்பட்டிடநீலணிவிடுப்பார். ௬௩

தருக்குமங்கலக்கடைத்தலைதொறுமணிதழைப்ப
நிரைக்குமொண்கனைமுயரம்பைபூகதமிவைநிகழ்த
லைக்குமெல்லிதழ்மாதர்தோடுடைகளத்தழகை
யிரக்கும்வண்ணம்வந்தேகடைகாக்குமாறேய்க்கும்.

ஓதிமஞ்சினகரத்தயனிறுவியேயுட்போ
யாதியங்கழல்பணிந்துமீண்டிடுமுனங்கடைந்த
மாதர்நன்னடைவிழைந்துபின்சென்றிடவந்து
போதனங்கீதுகண்டிலன்றேடியேபோகும். ௬௫

முன்னநங்கன்மாட்டெய்துபூண்முலையினுட்கண்ட
மன்னுமைமந்தர்தங்காதல்கூர்மகளிரைநோக்கி
என்னைனமெதிர்தமியளாய்நேர்ந்தவளார்கொ
லென்னவங்கவருடுவர்விழைந்தனவொன்று ௬௬

மருவுமாடவொழின்மிகுவடிவினைநோக்கிப்
பொருவின்மாரவேடனதுளம்பொருமலேவெள்கி
யுருவமாயிவர்கண்முன்முற்றியாதியாமுன்
னருவமாயதுநன்றெனத்தேறியேயகல்வான். ௬௭

உள்ளமாதரங்கூரவின்சொற்புகன்றதுவும்
வள்ளலாகியகூவமாநகர்நறைமாந்தர்
தெள்ளுநீர்மைகண்டடைந்தருத்தேனுவீழாண்டிருந்துப்
பள்ளமார்தருகருமுகிலினம்பயப்படுமால்.

மோக்ஷசாகரங்கடந்துநூற்களைகண்டமுனிவர்
யாகசாலையினுயர்புகைப்படலைகளெழுந்து
பாகசாதனன்பதம்பெறும் பசும்பொன்மாளிகைபயான
மேகசாலங்கண்மேருவைச்சூழ்ந்தெனமேவும். ௪௯

இனையவாகியகூவமாந்தனிநகரிடத்து
முனைவர்வானவர்சூழ்தரமுப்புரமுடிப்பான்
புனிதனைக்குபிக்கரிமுகன்புகுந்துகூவரத்தைத்
தனியுலாவரத்தொடித்தனன்செலவினைத்தடுத்தான்.

ஆனகாலையினமரர்தந்துயருடனுண்டு
ஞானநாயகன்றிரிபுரம்பொடிபடநகைத்து
வானநாடவர்வாழ்வுபெற்றுயர்ந்திடவழங்கிக்
கூனன்மேருவிற்பிடித்தமர்க்கோலமாய்நின்றான். ௫௧

நின்றவாதியங்கார்தனைப்பொடித்திடுநிலையா
லன்றுகூவரக்கின்றெனும்பிள்ளையோடமர்க்குச்
சென்றதாலுடன்வயிரவர்க்காரையாந்தேவி
பொன்றமேருகோதண்டமண்டிதனெனவுறைந்தான.

வேறு.

காங்கயூன்வடுகென்றக்கற்காதிகூர்மகண்டன்வீரி
யோங்குறுகாலச்செந்தீயுருத்திரனூடகேசன்
பூங்கமலைத்தன்மாயோன்புரந்தரன்முனிவர்விண்ணோ
ராங்களுமிவறவர்போற்றிக்கங்கினர்கூவமதார்.

ஆயிரங்கோடியயன்றிருமாறு
மேயினர்பூசைவிளைத்தனர்கூவத்
தூயனைவேதவழிபாடுதொடங்கி
யேயினவிந்திரருக்களவின்றே. ௬௬.

வேறு.

அண்டர்சித்தரியக்கர்கின்னரராழ்பிலத்துறைநாகர்விண்
மண்டிடதற்கிடனாகிவைகிய கூவமாநகர்சூழ்தர, வெண்
டிசைக்கணும் வந்தமைத்தவர் பூசைசெய்த விலிங்க
